Registeted as a News Paper in Sri Lanka

...விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸு வைகாசி மீ 8 ஆம் உ செவ்வாய்க்கிழமை (22 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 26 ஓசை 93

## சர்வதேச மன்னிப்புச் சபையில் பயங்கரவாதிகள் உள்ளனர்!

-ரஞ்சன்

(கொழும்பு)


சர்வதேச மன்னிப்புச்சபையில் சர்வதேச பயங்கரவாதிகளும் உள்ளனர். அந்த அமைப்பிடம் நான் மண்டியிடப் போவதில்லை, எந்தவொரு அமைப்புக்கும் நான் பயப்படமாட்டேன்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னா கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி நிமால் சிறிபால டீ சில்வா கேட்ட கேள்விக்கு பதிலளித்தே அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் கடிதங்களை நான் வாசிப்பதே இல்லை. அதில் உள்ள மேல்நாட்டு வெள்ளையர்கள் என்ன கடவுளின் வாரிசுகளா?

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



தமிழீழத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலின் போது யாழ்.நகரில் வெறிச்சோடிக்கிடந்த பாடசாலை வகுப்பறை, பஸ்நிலையம், ஆஸ்பத்திரி வீதி ஆகியனவற்றை இங்கே படத்தில்காணலாம்.

## காணாமல் போன நான்கு மீனவர் காங்கேசன்துறையில்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்திலிருந்து இம்மாதம் 12ஆம் திகதி காணாமல்போன தமிழக மீனவர்கள் நால்வரும் காங்கேசன்துறையில் இருப்பதாக இராமநாதபுரம் ஆட்சித்தலைவர் நேற்று கூறினார்.

கடல் கொந்தளிப்பு காரணமாக இவர்கள் இங்கு அடித்து செல்லப் பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை இந்தியாவுக்கு அழைப்பது தொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய [illegible]ரகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## தோட்டப் பாதுகாப்புக்கு தனி இராணுவ தொண்டர் படை

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான திணைக்களங்கள், தோட்டத் தொழிற்சாலைகள் உட்பட முக்கிய இடங்களுக்குப் பாதுகாப்பு வழங்க இலங்கை இராணுவத்தில் தனியான தொண்டர்படைப் பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்காக ஏற்கனவே ஆயிரத்து எண்ணூறு பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகவலை இலங்கை இராணுவத் தளபதி லெப்டினற் ஜெனரல் ஹமில்ரன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

தற்போது மூவாயிரம் துணைப்படை வீரர்கள் எம். பிக்களுக்கு பாதுகாப்பு அளித்துவருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

### பருத்தித்துறையிலிருந்து பொத்துவில் வரை

# தமிழீழம் நேற்று ஸ்தம்பிதம்; ஹர்த்தால் பூரண வெற்றி!

(யாழ்ப்பாணம்)

வடக்கே பருத்தித்துறையிலிருந்து கிழக்கே பொத்துவில் வரையுள்ள தமிழீழப் பகுதி எங்கும் நேற்று ஒருநாள் அசைகின்ற பொருள்கள் அசையாமல் நின்றன. அசையாத பொருள்கள் நிசப்தமின்றியிருந்தன.

வாகனங்கள் ஓடவில்லை, யளிக்கும் சைக்கிள்களும் ... களும், பாதசாரிகள் சிலரும்

## நெடுந்தீவுக் கரையில் இந்திய படகு சேதம்

(நெடுந்தீவு)

கேசன்துறையில் இருப்பதாக இராமநாதபுரம் ஆட்சித்தலைவர் நேற்று கூறினார்.

கடல் கொந்தளிப்பு காரண கொழும்பிலுள்ள இந்தியரகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## தோட்டப் பாதுகாப்புக்கு தனி இராணுவ தொண்டர் படை

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான திணைக்களங்கள், தோட்டத் தொழிற்சாலைகள் உட்பட முக்கிய இடங்களுக்குப் பாதுகாப்பு வழங்க இலங்கை இராணுவத்தில் தனியான தொண்டர்படைப் பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்காக ஏற்கனவே ஆயிரத்து எண்ணூறு பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகவலை இலங்கை இராணுவத் தளபதி லெப்டினற் ஜெனரல் ஹமில்ரன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

தற்போது மூவாயிரம் துணைப்படை வீரர்கள் எம். பிக்களுக்கு பாதுகாப்பு அளித்துவருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

## பலஸ்தீனரின் குறிக்கோளை அடைய இலங்கை உதவும்

- பிரேமதாஸா

(கொழும்பு)

இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் அரசியல் யாப்பின் கீழ் ஏனைய பிரஜைகளுக்கு இருக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாநேற்றுபண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பேசுகையில் கூறினார்.

தென்கிழக்காசிய பிராந்திய மூன்றாவது சர்வதேச இஸ்லாமிய மாநாட்டை ஜனாதிபதி ஆரம்பித்துவைத்து உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி இஸ்ரேலின்ஆக்கிரமிப்பை ஒழித்து ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பிரதேசங்களில் இருந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படலாம்

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தர பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்படலாம்.

பாராளுமன்றத்தில் ஐக்கிய சோஷலிச முன்னணி எம்.பி, அத்தாவுட செனிவிரத்தினா கேட்ட கேள்விக்கு பதிலளித்த கல்வி திட்ட அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்கா இவ்வாறு கூறினார்.

க. பொ. த. உயர்தர பரீட்சையையும், சாதாரண தர பரீட்சையையும் டிசெம்பர் மாதம் நடாத்தவேண்டும் என அவர் அமைச்சரிடம் கேட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் இது குறித்து கல்வியமைச்சர் பரிசீலனை செய்து வருகிறார். முடிவு விரைவில் தீர்மானிக்கப்படும் என்றார்.

## ஓய்வூதியங்களைத் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஓய்வூதியம் பெற்றவர்களின் ஒய்வூதிய கொடுப்பனவுகளை மூன்று மாதத்தில் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா இதற்கான உத்தரவை ஓய்வூதிய பணிப்பாளருக்கு விடுத்துள்ளார்.

விதவைகள், அனாதைகளின் ஓய்வூதியம் துரிதப்படுத்தப்பட்டு வழங்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்கத்துறை ஊழியர்கள் ஓய்வுபெற்ற பின்னர் வயது முதிர்ந்த காலத்தில் இந்த ஓய்வூதியம் பெறுவதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வண. பேர்டினன்ஸ் சிலை திறப்பு விழா

மட்டக்களப்பு புனிதர் மைக்கேல் கல்லூரியை நிறுவியவரான வண.பேர்டினன்ஸ் பொனலின் உருவச் சிலை தேசிய வீரர் தினமான இன்று திறந்து வைக்கப்படும்.

பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்தவரான வண. பேர்டினன்ஸ்சின் சிலை கல்லூரி வளாகத்தில் திறந்து வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கவனித்து வருகிறது.

# ஹர்த்தால் பூரண வெற்றி!

(யாழ்ப்பாணம்)

வடக்கே பருத்தித்துறையிலிருந்து கிழக்கே பொத்துவில் வரையுள்ள தமிழீழப் பகுதி எங்கும் நேற்று ஒருநாள் அசைகின்ற பொருள்கள் அசையாமல் நின்றன. அசையாத பொருள்கள் நிசப்தமின்றியிருந்தன.

வாகனங்கள் ஓடவில்லை, கடைகள்,தொழிற்சாலைகள், அரச அலுவலகங்கள் செயல்படவில்லை, சந்தைகள், பேரூந்து நிலையங்கள், பாடசாலைகள், வீதிகள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. வழமையாக வீதியோரங்களில் போக்குவரத்துக்கு இடையூறாகப் பெரும்பாலும் காட்சியளிக்கும் சைக்கிள்களும் அவற்றுக்கு அருகே தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்றுவிட்டு. கலகலப்பாக வண்ணத்துப் பூச்சிகள் போல வரும் யுவதிகளும், இளைஞர்களும் நேற்றுக் காணப்படவில்லை.

வீதிகளில் அங்குமிங்குமாக இரண்டொரு சைக்கிள் வண்டிகளும், பாதசாரிகள் சிலரும் காணப்பட்டனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(6ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக் கரையில் இந்திய படகு சேதம்

(நெடுந்தீவு)

கடந்த சில நாட்களாக வீசும் கடும் காற்றுக் காரணமாக கொந்தளிக்கும் கடலிற் சிக்கிய இந்திய மீன்பிடி இழுவைப் படகொன்று நெடுந்தீவு தென்கரைக் கடலோர

(6ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன் பிணையில் விடுதலை; உண்ணாவிரதம் முடிவு

(தலவாக்கொல்லை)

கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்த மலையக முன்னணித் தலைவர் திரு. எஸ். சந்திரசேகரன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அறிவித்தல் கிடைக்கும்போது நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டுமென்று நீதிபதி தெரிவித்தார்.

திரு. சந்திரசேகரன் பிணையில் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தலவாக்கொல்லை ஸ்ரீ கதிரேசன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தளைப் பொலிசாரால் இரு இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

மாத்தளைப் பொலிஸார் நேற்று முன்தினம் இரண்டு ஸ்ரீ லங்காராணுவத்தினரை கைது செய்துள்ளனர். இராணுவத்தினர் இருவரும் இளம் பெண்களான இருவர்மீது பலாத்காரம் புரிந்ததாகவும், களவுகளில் ஈடுபட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட சமயம் இராணுவத்தினர்ஆயுதபாணிகளாக இருந்தனர்.

இதேவேளை,பொலநறுவை

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் ஹமீத் இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு சமாதானக் குழுத் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ.ஸி. எஸ். ஹமீத் இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார். விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா தூதராலயங்களில் மது பானம் வழங்கத் தடை

(கொழும்பு)

ஸ்ரீலங்காவின் வெளிநாட்டுத் தூதராலயங்களில் உத்தியோக பூர்வ வைபவங்களின் போது மதுபானத்தைப் பரிமாறக்கூடாது என்று தடை விதிக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத் தாபனங்களிலும் வைபவங்களின் போது மதுபானம் பரிமாறக் கூடாது என்ற அரசாங்கக் கொள்கையின் விஸ்தரிப்பே மேற்படி நடவடிக்கை என உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது வரை காலமும் ஸ்ரீலங்காவின் வெளிநாட்டுத் தூதராலயங்கள் வைபவங்களின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிஸ்ரலுடன் கைதான மாணவன் ஜே. வி. பியா?

(கொழும்பு)

வெள்ளவாயா என்ற இடத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவனிடம் ஒன்பது மில்லிமீற்றர் பிஸ்ரல் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றினர். ஜே. வி. பி. யைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் இந்த மாணவன் தாம் ஈ.பி. ஆர்.எல்.எவ் குழுவினரிடமிருந்து பிஸ்ரலை விலைக்கு வாங்கியதாகத் தெரிவித்திருக்கின்றான். இவன் குமுணக் காட்டையடுத்துள்ள பகுதியில் ஈ.பி ஆர்.எல்.எவ்வின் தமிழ்த்தேசிய இராணுவத்திடம் பயிற்சி பெற்றிருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

## மண்டபம் முகாமுக்கு 41 குழு அகதிகள்

சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட நாற்பத்தொரு தமிழ்க் குழு அகதிப் போராளிகள் மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## சமீபகால சுங்க வரலாற்றில் மிகப்பெரிய மோசடி!

(கொழும்பு)

வெளிநாடு ஒன்றிலிருந்து மின் விசிறிகளை இறக்குமதி செய்த நபர் ஒருவர் மின் விசிறி ஒன்றின் விலை ரூபா 481 என்று விலையைக் குறைத்து சுங்கப் பகுதியினருக்குத் தெரிவித்துள்ளார். கூரை மின் விசிறிகள் பாகங்களாகக் கழற்றப்பட்டுத் தனித்தனிப் பொதிகளாகக் கட்டப்பட்டிருந்தன. இந்த இறக்குமதியாளர் மொத்தம் 5728 கூரை மின் விசிறிகளை இறக்குமதி செய்துள்ளார். இது தொடர்பான விசாரணைகள் நேற்றுக்காலை சுங்கப் பகுதியினரால் கொழும்பு துறைமுக சுங்கப் பிரிவில் சுங்க அத்தியட்சகர் காமினி ராஜபக்ஸவினால் மேற்கொள்ளப்பட்டது.

இறக்குமதியாளர் தெரிவித்த விலையின் பிரகாரம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வரட்சிக்குப் பின் ஏற்பட்ட மழையே

## மீனில் புண் ஏற்படக் காரணமாகும்; இதனால் பாதிப்பு எதுவும் இல்லை!

(அம்பாறை)

நீண்ட கால வரட்சிக்குப் பின்னர் ஏற்படும் மழையைத் தொடர்ந்து, நன்னீர் மீனினங்களில் ஒருவகை புண்ணை ஏற்படுத்தும் நோய் ஏற்படுகிறது என்று அம்பாறை மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் எஸ்- நாகையா இப்பகுதிகளில் மீனில் நோய் ஏற்படுவதாக வெளியான செய்திகள் குறித்து ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

பொதுவாக தென்கிழக்கு ஆசியாவில் உள்ள சில பகுதிகளில் 1987 முதல் காலத்துக்குக் காலம் இந்நோய் உண்டாவது வழக்கம்.

இந்த நோயின் பெயர் 'எப்பசோற்றக் அல்சரேக்றிங் சிறட்றோம்' எனப்படும். இந்த நோய் மீன்களை உண்பவர்களுக்கு எதுவித நோயும் வராது.

இது பீடித்து மூன்று அல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 500 இளைஞர்கள் கைது!

(பொலநறுவை)

பொலநறுவைப் பொலிசார் நேற்று முன்தினம் காலை 500 இளைஞர்களை சதிவேலை, களவுகளில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் சுற்றிவளைத்துப் பிடித்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். விசாரணையின் பின் 4903 ர் விடுதலை செய்யப்பட்டனர்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

புதிய அச்சடிக்கும் திருமணக்கார்ட்டுகள், சகலடிஸைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்யஸ்ரீ காந்த்புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம்,

(B/1002)

தொழிற் கல்வி

Radio Officers (Ship) P.M. G Telex Operators (International) இரு பாலாரும். Air Conditioning And Refrigeration Electronics. (City and Guilds London)

வெளிநாடுகளில் பிரபல்ய மானவை. சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம் 2-6-90
Nesta Technical Institute
59, Station Road, Jaffna.

(R/ 480)


# தொழிற்சங்க தலைவரின் இடமாற்றம் ரத்து

(கிளிநொச்சி)

தொழிற் சங்கத் தலைவர் ஒருவரின் இடமாற்றம் ஒன்று விடுதலைப் புலிகளின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இரணைமடுச் சந்தியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் தொழிலாளியாக வேலை செய்து வந்த தொழிற் சங்கத் தலைவரான பி. சக்திவேலு என்பவர் எந்த வித குற்றச்சாட்டுமின்றி உயர் அதிகாரி ஒருவரால் திடீரென வவுனியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

திரு. சக்திவேலு இதுசம்பந்தமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புகார் செய்ததைத் தொடர்ந்து புலிகளால் இவரது இடமாற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. (49)

# தெ. ப. பெர். சங்கத்தில் சம்பளம்வழங்கநிதியில்லை

பச்சிலைப்பள்ளி தெங்கு பனம் பொருள் சங்கம் தனது அங்கத்தவர்களின் கள் கொள்வனவுச் சம்பளத்தை வழங்க முடியாத அளவுக்கு நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சங்கம் கொள்வனவு செய்யப்படும் கள்ளில் கால் பகுதியே விற்பனை செய்யப்படுகின்றது. மிகுதிமுக்கால்பங்கு கள்ளு மதுசாரமாக வடிக்கப்படுகின்றது.

வடிக்கப்படும் மதுசாரம் இரண்டாம் வடிக்காக வரணி வடி சாலைச் சமாஜத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்டு வடிக்கப்படும் மதுசாரம் போத்தலில் அடைக்கப்பட்டு விற்பனைக்காக அறிமுகப்படுத்துவதில் ஏற்படும் தாமதம் காரணமாக சங்கத்தில் நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆனால் மதுசாரம் வடிப்பதற்காக சுமார் 20 இலட்சம் ரூபா பணம் சங்கத்தின பணமாக முடங்கியுள்ளது. இதனால் தொழிலாளருக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் சங்கம் இருக்கின்றது. (63)

# வண்ணனின் உருவச்சிலை மாங்குளத்தில் திறப்புவிழா

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்து மாங்குளம அமைதிப் படை முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த இளம்புலி வண்ணனின் உருவச்சிலை திறப்பு விழா அண்மையில் மாங்குளம் சந்தியில் நடைபெற்றது.

மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்ட உருவச்சிலையை மாங்குளம் வர்த்தகர் சங்கத் தலைவர் திரைநீக்கம் செய்து திறந்து வைத்தார்.

வண்ணனின் தாயாரான திருமதி சிவரெத்தினம் குத்து விளக்கை ஏற்றி வைக்க, வண்ணனின் தந்தையான சீவரெத்தினம் மகனின் சிலைக்கு மாலை அணிந்து கௌரவித்தார்.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சந்திரன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, கிளிநொச்சி கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராசநாயகம், கனகபுரம் சிற்றூரவைத் தலைவர் சனகேந்திரம் உட்பட மற்றும் பலர் கப்டன் வண்ணனின் சேவையைப் பாராட்டிப் பேசினர். (49)

# மரக்கறி விதைகளை விற்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

விவசாயத் திணைக்களத்தால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்ட மரக்கறி விதைகளும், உப உணவுப் பயிர்ச் செய்கைக்கான விதைகளும் விற்பனை செய்யப்படுகிறது.

கிளிநொச்சி பழைய நீதிமன்றக் கட்டிடத்தில் பரந்தன் உதவி விவசாயப் பணிப்பாளர் காரியாலயத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையத்தில் வைத்து இவ் விதைகள் விற்பனை செய்யப்படுகிறது.

சகல விதமான மரக்கறி விதைகளும், உழுந்து, பயறு, நிலக்கடலை, விதைநெல் ஆகியனவும் விவசாயிகளின் நன்மை கருதி இங்கு விற்பனை செய்யப்படுவதாக உதவி விவசாயப் பணிப்பாளர் கந்தையா தெரிவித்தார். (49)

## வீதியின் நிலை

எண்ணூற்றிஐம்பது குடும்பங்கள் வசிக்கும் மாவடி வேம்பு கிராமத்தின் வீதிகள் கடந்த பல வருடங்களாக எதுவித வீதித் திருத்தமும் மேற்கொள்ளப்படாமல் பள்ளமும் படுகுழியுமாக காணப்படுகிறது.

இதனால் இவ் வீதிகளில் பிரயாணம் செய்ய முடியாது மக்கள் பெரும் கஸ்டம் அனுபவிக்கின்றனர். எனவே வெகு விரைவில் இவ் வீதிகளை திருத்தி அமைக்க உரிய பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இக் கிராம மக்கள் வேண்டுகின்றனர்.

இத்துடன் மாவடி வேம்பு கிராமத்தின் எல்லைக்குள் உட்பட்ட பிரதான வீதியில் மின்குமிழ்கள் இன்றி இருளில் மூழ்கி காணப்படுகிறது. (29)

## பிராந்திய சபை

(கொழும்புத்துறை)

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களில் பிராந்திய சபையின்வருடாந்தத் பொதுக்கூட்டம் யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சமாய உப தலைவி செல்வி தங்கம்மா நல்லதம்பி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சமாசச் செயலாளார் திரு. த. நந்தகுமார் சமுகமளித்திருந்தார். கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த திரு. எஸ். கந்தசாமி பிராந்திய சபையின் தலைவாராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராகத் திரு. கே. ஏபிராகம் லிங்கன் தெரிவு செய்யப் பட்டார். நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# கொழும்பில் தவம் கிடக்கும் விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயலகத்தில் உள்ள குடிவரவு குடியகல்வு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் கொழும்பில் தவம் கிடப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்டப்பகுதி மக்களின் வீண்அலைச்சல் செலவுகளை போக்கி அரசு இங்கு வைத்து இந்த விண்ணப்பங்களை ஏற்க ஏற்பாடுசெய்தது.

ஆனால் இதுவரை அனுப்பிய விண்ணப்பங்கள் குறித்து எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதேசமயம் கொழும்பில் ஒப்படைக்கப்படும் பாஸ்போர்ட் விண்ணப்பப்படிவங்களுக்கு மூன்று நான்கு நாட்களிலும் பாஸ்போர்டை பெற்றுக்கொள்ள முடிகிறது என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மடுக்கோயில் திருத்த வேலைகள்

(மன்னார்)

மடுமாதா தேவாலயத்தில் தற்போது திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. தற்போது தினசரி யாத்திரிகர்கள் இங்கு வந்து போகிறார்கள்.

எதிர் வரும் ஜூலை, ஆகஸ்ட் திருநாட்களுக்கு இம்முறை அதிக யாத்திரிகர்கள் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுசிறது.


மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
CLINT EASTWOOD IN
HEART BREAK RIDGE
வெகுவிரையில்
ராஜா சின்ன ரோஜா

வெலிங்டன் (யாழ்)
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30,
6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
திருடி
B 878

வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

ராஜா (யாழ்)
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7·00, 9·45
இன்று
Terence Hill Bud Spencer
I AM FOR THE
HIPPOPOTAMUS

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
UNMASKING
THE IDOL
(Color)

லிடோ (யாழ்)
18 முதல் 21 வரை
Daily at. 4. P.M 6.30
& 9.30 P.M.
Sat &Sun& Puplic Holiday
10.30 2.30 4.30 6.30 9.30
CAN BE DONE
AMIGO
(color)
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

ஸ்ரீதர் - (யாழ்.)
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி
R/699


# விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

பெரிய பண்டிவிரிச்சான் கொத்தணி பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி எதிர் வரும் ஜூன் மாதம் 6 ஆம்திகதி நடைபெறவுள்ளது.

தட்சனாமடு அ. த. க. பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. வள்ளுவன் இல்லம் முதலாம் இடத்தையும், பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

அதிதிகாளக கொத்தணி அதிபர் திரு. சு. சூசைப்பிள்ளை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் திரு. கணேஸ், பாருக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


வெற்றிடங்கள்

மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்

ஆங்கிலத்தில் உள்ள அரிய நூல்களைத் தமிழாக்கம் செய்ய மேலும் சில மொழிபெயர்ப்பாளரும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் தேவை. வயதெல்லை இல்லை. 27. 5. 90 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் தகுதிச் சான்றுகளுடன் நேரில் சமுகம் தரவும். திறமை, அனுபவத்துக்கேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

தொடர்பு:

இல, 6, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(R/493) (மணிக்கூட்டுக் கோபுரத்துக்கண்மையில்)


வவுனியா

# நகரசபைக் கட்டடத்திலிருந்து பொலிசார் விலக 3 மாதமாகும்

(வவுனியா)

வவுனியா நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ள பொலிஸார் இக்கட்டடத்தை விட்டு முற்றாக விலகிச் செல்வ

டடத்திற்குள் பொலிஸார் தங்கி விலகிச் செல்லத் தாமதமெடுப்பதுவருத்தத்தை அளிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

மாறிச் சென்றதையடுத்து பொலிஸ்காரரும் இக்கட்டடத்தில் தங்கியுள்ளனர் என்றும் நகரசபை நிர்வாகத்

# 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

விளக்கை ஏற்றி வைக்க, பேசினார். (49)

யாழ் மாவட்டப்பகுதி மக்களின் வீண் அலைச்சல் செலவுகளை போக்கி அரசு இங்கு வைத்து இந்த விண்ணப்பங்களை ஏற்க ஏற்பாடுசெய்தது.

களுக்கு மூன்று நான்கு நாட்களிலும் பாஸ்போர்டை பெற்றுக்கொள்ள முடிகிறது என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர் வரும் ஜூலை, ஆகஸ்ட் திருநாட்களுக்கு இம்முறை அதிக யாத்திரிகர்கள் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுசிறது.

## வெற்றிடங்கள்

### மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்

ஆங்கிலத்தில் உள்ள அரிய நூல்களைத் தமிழாக்கம் செய்ய மேலும் சில மொழிபெயர்ப்பாளரும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் தேவை. வயதெல்லை இல்லை. 27. 5. 90 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் தகுதிச் சான்றுகளுடன் நேரில் சமுகம் தரவும். திறமை, அனுபவத்துக்கேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

தொடர்பு:

இல, 6, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(மணிக்கூட்டுக் கோபுரத்துக்கண்மையில்)

(R/493)

## அதிஸ்டலாபச் சீட்டு

கடந்த 09 - 05 - 1990 இல் அதிஸ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு சிறு தவறுகளின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. இச் சீட்டிழுப்பு மீண்டும் இன்று 22 - 05 - 1990 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நாயன்மார்கட்டு இராமநாதர் வீதியில் உள்ள ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான முன்றலில் அதிஸ்டம் பார்க்கப்படும். இத்துடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். பொது மக்களை இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

தகவல்:

EUROPE CHINA HOTEL
Jaffna.

(R/495)

### செம்பியன் பற்று
## புனித. பிலிப்பு நேரியார்
### திருவிழா நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| வைகாசி 17- | கொடியேற்றம்<br>மாலை 6. 00 மணிக்கு<br>செபமாலை, திருப்பலி, மறையுரை |
| வைகாசி 18 - 24 | தினமும் மாலை 6. 00 மணிக்கு<br>செபமாலை, திருப்பலி, மறையுரை |
| வைகாசி 25 | நற்கருணை நாள் |
| வைகாசி 26 | காலை 7. 00 மணிக்கு<br>திருநாள் கூட்டு திருப்பலியும்<br>திருச்சுரூப பவனியும்<br>இடம் பெறும். |

குறிப்பு:-யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து யாத்திரீகர்களின் வசதிக்காக பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பங்குத்தந்தை

(R/479)

வவுனியா

# நகரசபைக் கட்டடத்திலிருந்து பொலிசார் விலக 3 மாதமாகும்

(வவுனியா)

வவுனியா நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ள பொலிஸார் இக்கட்டடத்தை விட்டு முற்றாக விலகிச் செல்ல சுமார் மூன்று மாதங்களாகும் என்ற பொலிஸ் அதிகாரியின் அறிவிப்பை அடுத்துநகரசபை அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு மத்திய அரசாங்கம் எந்தவிதமான உதவியும் செய்யவில்லை இது வவுனியா மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட கட்டடம் இக்கட்டடத்திற்குள் பொலிஸார் தங்கி விலகிச் செல்லத் தாமதமெடுப்பதுவருத்தத்தை அளிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் இராணுவத்தினரும் அவர்கள் வேறொரு இடம் மாறிச் சென்றதையடுத்து பொலிஸ்காரரும் இக்கட்டடத்தில் தங்கியுள்ளனர் என்றும் நகரசபை நிர்வாகத்தைக் கொண்டுஇயக்குவதற்கு தற்போதைய இடம் போதாமல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் (தி)

## சட்டவிரோத மின்பாவனை நிந்தவூரில் தடை

(நிந்தவூர்)

நிந்தாவூர்ப்பகுதியில் அதிகரித்து வரும் சட்டவிரோத மின்பாவனையைத் தடுப்பதற்கு கிராமசேவை உத்தியோகஸ்த்தர்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

கிராமசேவை உத்தியோகஸ்த்தர்கள், தமது பிரிவுகளில் சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்றிருப்போரைத் தடுப்பதுடன் அவ்வாறான மின் இணைப்புகளை அகற்றிவிடுமாறும் வற்புறுத்தவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளார்.

இதுவிடயத்தில் கிராம சேவை உத்தியோகஸ்த்தர்கள் ஒத்துழைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப்பிரதேசப் பொறுப்பாளர் திரு. விக்கிரம் கோரியுள்ளார்.

கிராமசேவை உத்தியோகஸ்தர்களின்அறிவுறுத்தலைஉதாசீனம் செய்து தொடர்ந்தும் சட்டவிரோதமாக மின் தொடர்பு கொள்வோர் பற்றித் தமது கவனத்திற்குக் கொண்டு வருமாறும் திரு. விக்ரம் தெரிவித்துள்ளார். (53)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ். தேசிய ஹோமியோபதி ஸ்தாபகரும் ஹானமன் வைத்தியக் கல்லூரி அதிபருமாகிய

டாக்டர்
### வில்லியம். எஸ். சோமசுந்தரம்

தோற்றத்தில் ஹானமனாயும் கொள்கையில் மூர்த்தியுமாய் விளங்கிய அறிவுத்தந்தையே! எம்மில் பலரின் இழப்பு நம்மைப் பாதிக்காமல் இருக்க ஓர் சிலரின் இழப்புகள் மட்டும்ஏன்எம்மைமீளாத் துன்ப சாகரத்தில் ஆழ்த்துகின்றது?

வைத்தியக் கலாநிதியே, பலவற்றிற்கு விளக்கம் தேவை. விளக்க முனைந்தவர்கள் ஆளுக்கு ஒன்றாகச் சொல்லி தம் திறமையைக் காட்டிக் கொண்டார்களே தவிர எமக்குத் தெளிவு தரவில்லை...... அது தான் எம் தந்தையின் தனித்தன்மையோ? ஆம்......

இங்ஙனம்
பழைய மாணவ மாணவிகள்.

## ஆசிரியர் பற்றாக்குறை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிபரும் மூன்று தொண்டர் ஆசிரியர்களுமே பணியாற்றுகின்றனர்.

ஒன்பதாம் தரத்தில் உள்ள இப் பாடசாலையில் போதிய ஆசிரியர்கள் இன்றி இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## விளையாட்டுப் போட்டி


(மன்னார்)

பெரிய பண்டிவிரிச்சான் கொத்தணி பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி எதிர் வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தட்சனாமடு அ. த. க. பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. வள்ளுவன் இல்லம் முதலாம் இடத்தையும், பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

அதிதிகாளக கொத்தணி அதிபர் திரு. சு. சூசைப்பிள்ளை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் திரு. கணேஸ், பாருக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15- 10- 1969 | 22- 05- 1988 |

### சு. கனகசுந்தரலிங்கம் எட்றிச்
### (வெள்ளை)

தேசிய வீரர் தினத்தில் தமிழ் ஈழத்
தேசிய வீரன் சேர்ந்தானவ் வீரசொர்க்கம்
புலிக்குட்டி ஒன்றுடனோர் புலிக்குட்டியாய் நிற்போன்
கொலைக்கென்று வந்தவரைக் குலைத்துக் கலக்கிட்டோன்
'வெள்ளை' தான் அவ்வீரன்! வேங்கை மறப்படையின்
பிள்ளைதான்! முன்னாள் சுழிபுரத்துப் பிரதேசப்
பொறுப்பாளன்! பின்னாள் உடுவிற் பிரதேச
மறத்தலைவனாக வாகாய்ப் பணிசெய்தோன்
மண்கொள்ளை 'இந்திவெறி' வலைவீசித் திரிகையிலும்
கண்ணுக்குள் மண்தூவிக் கச்சிதமாய்ச் செயற்பட்டான்
அடக்கிப் புலிகளினை ஆள்வோரின் சலுகைபெற
வடக்கர்கள் வந்தார்கள் வஞ்சகர்கள் சதித்திட்டம்
நடக்கவிடோம் என்று நாட்டி அரும் சாதனைகள்
வெற்றிவாகை சூடி வேங்கைகள் நிமிரவெனப்
பெற்றெடுத்தாள் தமிழன்னை! வெள்ளையை இவ் வேங்கையினை
கனகசுந்தரலிங்கக் காளையிவன் அண்ணன்
தனை லங்கா வெறிப்படையர் சாகடித்தார் மன்னாரில்!

சுன்னாகம் மக்கள்

(B/1001)

# வண.லோங் அடிகளார் முத்திரைச் சிறப்பிதழ்

## ஆழத்தில் மறைந்திருக்கும்-தமிழ் ஈழத்தின் முத்து நீதான்

கல்வியெனும் கனிரசத்தை கரும்பாய் ஊட்டி
கற்றோரை யாழ்ப்பாணக் கரையில் தந்தாய்!
எல்லையற்ற பேரறிஞர் எழிலாய் ஆக்கி
எக் காலம் மறக்காத ஏந்தன் என்போம்
அல்லது பட்டுத்தான் அடிகள் நீயும்
ஆக்கிவித்த நூலகந்தான் அழிந்து போச்சே
பல்கலைகள் விளையாட்டு பாங்காய் ஈந்த
பார்புகழும் ஈழமண்ணின் முத்து நீதான்.

அயர்லாந்து தேசத்தில் அடிகள் வந்தாய்
அன்பதனால் யாழ்ப்பாண அணங்கை கொண்டாய்
பெயர்பெற்ற பத்திரிசியார் பெருமை ஓங்க
பெரும்சேவை செய்துதான் பேரும் கண்டாய்
துயருற்ற ஈழத்தார் துகள்கள் போக்க
துறைபலது வாதிட்ட தூயோனானாய்
பயிரிட்ட நூலகந்தான் பாழாய் ஆச்சே
பாபடைத்த ஈழமண்ணின் முத்து நீதான்.

யுத்தத்தில் அழியாத சிலையும் நீதான்
யுகமதனில் இதுவுமொரு புதுமையாமோ?
சத்தமுடன் செல்லடிகள் சமரும் பார்த்தாய்
சரித்திரத்தில் இடம் பெற்ற சாகர முத்தே
தித்திக்கும் தமிழ் மணக்கும் திரைசூழ் நாட்டில்
திரண்டிடுவார் புனரமைக்க திண்தோள் வீரர்
முத்திரையில் வெளிவந்த முனிவர் ஏறே
முத்தமிழால் வாழ்த்துகின்றோம் மூதூர் தன்னில்

— கவிஞர் தேவதாசன்

'தமிழ் மகன்' எனத் தம்மை விரும்பிய தனித்துவ மேற்கத்தையர் லோங் அடிகள் நினைவு முத்திரை வரும் நாளில் நாமும் இணைகின்றோம்!

**பல் கட்டுபவர்கள், கண்ணாடி வழங்குபவர்கள்**

**மோறாயஸ்**
(வெலிங்டன் சந்தி)
50, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அறிவின் முதற்சொத்தாம் லோங் அடிகளுக்கு முத்திரை வெளியிடும் நாளில் வெளிவரும் "ஈழநாதம்" சிறப்பிதழுக்கு

**எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்**

பல் கட்டுவதிலும், கண்ணாடித்தெரிவில்



ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றாகத் திகழ யாழ். பொதுநூலகத்தை உருவாக்கிய சிற்பி
**வண. லோங் அடிகளார்**
(டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ், ஜே. பி.)
அவர்து நினைவாக இலங்கை ஐரேர்ப்பியர் ஒருவரை தேசிய வீரர் அந்தஸ்து வழங்கி இன்று முத்திரை வெளியிட்டு வைக்கிறது.

அமலமரித் தியாகியும், முன்னாள் அதிபருமான வண. பிதா. ரி. எம். எவ். லோங் அடிகளாரின் செயல் திறனைப் பாராட்டும் முகமாக தபால் தந்தித் திணைக்களம் ஒரு ஞாபகார்த்த முத்திரையை தேசிய வீரர் தினமாகிய மே மாதம் 22ஆம் திகதி 1990ஆம் ஆண்டு (இன்று) வெளியிடவுள்ளது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

'வாழ்ந்தவர் கோடி - மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிலைத்தவர் சிலரே' இந்த வரிசையில் லோங் அடிகளார் முதன்மை பெற்றவர். அவர் ஒரு சொல் வீரனாக வாழாது, செயல் வீரனாகவே வாழ்ந்தார். அயர்லாந்து நாட்டில் பிறந்தவராக இருந்தாலும், யாழ். நகரையே தன் பிறப்பிடமாக நினைத்து தமிழ் மக்களைத் தம் உயிருக்கும் மேலாக நேசித்தார்.

'தமிழ் மகன்' என தன்னை பிறர் அழைப்பதில் பெருமைப்பட்ட லோங் அடி

### லோங் அடிகளார் கடிதங்களில் இருந்து சில வரிகள்......

லோங் அடிகளார் அவுஸ்திரேலியா சென்ற பின்னர் அவரின் பழைய மாணவன் ஒருவன் இங்கிருந்து அவருக்கு எழுதிய கடிதத்திற்கு லோங் அடிகளார் 20.8.1954 திகதியிட்டு எழுதிய பதில் கடிதத்தில் இருந்து சில வரிகள் ......

''யாழ். நகரில் இறுதியான நாட்கள் மிகவும் சிரமமானவையாய் அமைந்தன. பல பிரியாவிடை வைபவங்களும் எனது இதயத்தை மிகவும் வாட்டலாயின. இவற்றின் காரணத்தால் பலருக்கு நான் தனிப்பட்ட வகையில் எனது மன நிலையை எடுத்துக் கூறும் வாய்ப்பு இல்லாது போயிற்று. இறுதியான பத்து நாட்களையும் எப்படித் தாக்குப் பிடித்தேன் என்று இப்போது கூட என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. யாழ். நகரில் இருந்து புகையிரதம் புறப்பட்ட போது எனது இதயம் வெடித்து விடுமோவென்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது''

இன்னும் ஒரு மாதத்தில் கிழக்கு அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல இருக்கிறேன் அங்கு ஓர் புதிய கலாசாலை அமைக்கும் வேலைகள் என்னைக் காத்திருக்கின்றன. இவ்வகை வேலைகளுக்கு எனது வயது ஓரளவு தடையாயிருக்கலாம். ஆயினும் கட்டடம் அமைப்பதிலும் அதற்கென நிதி சேகரிப்பதிலும் எனக்குப் போதிய அனுபவம் உண்டென்பதை மறுக்க முடியாது. யாழ். நகர் மக்கள் எவ்வளவு தாராள மனம் படைத்தவர்கள் என்பதை என்னால் என்றுமே மறக்க முடியாது. மூன்று வருடத்திற்குள் ஐந்து இலட்சம் ரூபாய் எனது பணிக்கு தந்து ஒத்துழைத்தார்கள்'

நீங்கள் ஒருவரை பிரிந்ததாக எண்ணலாம் என் மனமோ எத்தனையோ நல் இதயங்களை விட்டுப் பிரிந்தது எல்லாம் என்றும் அகலா நிகழ்வாக உள்ளது.''

**முத்திரை நாயகன் லோங் அடிகளார் என்றும் எமது நினைவுகளில் வாழ்வாராக!**

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்;
சகல விதமான மரவேலைகளுக்கும் பூச்சாடி, பூக்கல், அழகிய தூண் கற்கள் (Balustrades)

**அருள்ஸ்**
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

'சர்வதேச எழுத்தறிவாண்டில் தேசிய வீரராய் இலங்கை சர்வதேச அறிஞரைக் கௌரவிப்பதை வரவேற்போம்!
சம்சுன் ரி. வி. விற்பனை முகவர்

வழங்குபவர்கள்

## மோறாயஸ்

(வெலிங்டன் சந்தி)

50, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அறிவின் முதற்சொத்தாம் லோங் அடிகளுக்கு முத்திரை வெளியிடும் நாளில் வெளிவரும் "ஈழநாதம்" சிறப்பிதழுக்கு

**எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்**

பல் கட்டுவதிலும், கண்ணாடித்தெரிவில் உதவுவதிலும் கடந்த முப்பது வருடங்களுக்குமேலாக நீங்கள் நாடுபவர்கள்

## பி. ஜ. பர்னான்டோ

(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் எதிரில்)

247, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: (அரசினர் வைத்தியசாலை எதிரில்)

292 (540) ஆஸ்பத்திரி வீதி;
யாழ்ப்பாணம்.

## வண. லோங் அடிகளார்

(டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ், ஜே. பி.)

**அவரது நினைவாக இலங்கை ஐரோப்பியர் ஒருவரை தேசிய வீரர் அந்தஸ்து வழங்கி இன்று முத்திரை வெளியிட்டு வைக்கிறது.**

**அமலமரித் தியாகியும், முன்னாள் அதிபருமான வண. பிதா. ரி. எம். எவ். லோங் அடிகளாரின் செயல் திறனைப் பாராட்டும் முகமாக தபால் தந்தித் திணைக்களம் ஒரு ஞாபகார்த்த முத்திரையை தேசிய வீரர் தினமாகிய மே மாதம் 22ஆம் திகதி 1990ஆம் ஆண்டு (இன்று) வெளியிடவுள்ளது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

'வாழ்ந்தவர் கோடி - மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிலைத்தவர் சிலரே' இந்த வரிசையில் லோங் அடிகளார் முதன்மை பெற்றவர். அவர் ஒரு சொல் வீரனாக வாழாது, செயல் வீரனாகவே வாழ்ந்தார். அயர்லாந்து நாட்டில் பிறந்தவராக இருந்தாலும், யாழ். நகரையே தன் பிறப்பிடமாக நினைத்து தமிழ் மக்களைத் தம் உயிருக்கும் மேலாக நேசித்தார்.

'தமிழ் மகன்' என தன்னை பிறர் அழைப்பதில் பெருமைப்பட்ட லோங் அடிகளார் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். பிரம்படி கொடுத்து மாணவர்களுக்கு கல்வி புகட்டுவது தவறு. அன்பான வார்த்தைகளால் தான் மாணவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டும் என்பதற்காக பிரம்பைத் தீயிலிட்டும் பொசுக்கினார்.

யாழ். நகர மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஒரு நூல்நிலையம் மிக அவசியம் என்பதை உணர்ந்த லோங் அடிகளார் உலகின் பல பாகங்களுக்கும் சென்று பணம் திரட்டி வந்தது மட்டுமல்ல, பல அரும்பெரும் நூல்களையும் திரட்டி வந்து ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றாகத் திகழக்கூடிய பொது நூல் நிலையம் ஒன்றை யாழ். நகரில் உருவாக்கினார்.

2ஆம் உலக யுத்த காலத்தில் இராணுவ விமான நிலையமாக ஆங்கிலேயரால் பாவிக்கப்பட்டு வந்த பலாலி விமான நிலையத்தை, யாழ் நகர மக்கள் பாவிக்கக்கூடிய சிவில் போக்குவரத்து விமான நிலையமாக மாற்றிய பெருமையும் லோங் அடிகளாரையே சாரும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைதான் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர், ஆசிரியர்களிடையே முதன்மை பெற்று விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் இக்கல்லூரியை வழிநடத்தி வந்தார்.

(சிறப்பிதழ் ஏற்பாடு)
விசேட நிருபர்

சகல விதமான மரவேலைகளுக்கும் பூச்சாடி, பூக்கல், அழகிய தூண் கற்கள் (Balustrades)

## அருள்ஸ்

107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

சர்வதேச எழுத்தறிவாண்டில் தேசிய வீரராய் இலங்கை சர்வதேச அறிஞரைக் கௌரவிப்பதை வரவேற்போம்!
சம்சுன் ரி. வி. விற்பனை முகவர்

## றேடியோ மனுவல்

121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அறிவின் சிகரம்! அறிவை மற்றவரும் அறிந்திட அயர்லாந்திலிருந்து யாழ். வந்து யாம் பெற்ற இன்பம் நூலறிவைப் பெருக்க உழைத்த லோங் அடிகள் நினைவாக.......

## பிறைற் ஹவுஸ்

அந்தியகால சேவையில் உங்கள் நண்பன்

(யாகப்பர் ஆலய அருகாமை)

210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# வண. லோங் அடிகள் நினைவு முத்திரை வெளியீடு சிறப்புறவாழ்த்துகிறோம்!

ஆங்கில மருந்துகள்,
பால்மா வகைகளுக்குச் சிறந்த இடம்

## சிற்றி மெடிக்கல்ஸ்

487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கடிகாரங்களைக் கச்சிதமாகத் திருத்திக்கொள்ள
எம்மை நாடுங்கள்

## சில்வா வாச் வேக்ஸ்


10, புதிய மத்திய சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மானிட நேயத்தினதும், இரக்கத்தினதும் ஊற்றுக்களை எங்கள் இதயங்களில் தோற்றுவித்த வண. லோங் அடிகளாரின் நினைவாக முத்திரைச் சிந்தனைகள் வாழ்விற்கும்!

# பிலிப்ஸ் ஞாபகார்த்த மருத்துவ மனை

106, - 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்நகரில் பிரசித்திபெற்றவர்கள்....




உங்கள் நினைவில் நின்றகலாத
காலத்தால் அழியாத
நிகழ்வுகளை
எழில் கொஞ்சும் வண்ணத்தில்
மனங்கவரும் வண்ணம் தருபவர்கள்

## நவீன ரக வீடியோ கமராக்கள்....

1. **NATIONAL** (நாஷனல்) F10
2. **PANASONIC** (பனசோனிக்) CCD MS 1 Super VHS
3. **NATIONAL** [நாஷனல்] M 7

மூன்று வீடியோ கமறாக்களை ஒரே நேரத்தில் பொருத்தி
கண்ணைக் கவரும் வண்ணத்தில் சிறந்த முறையில் படமாக்கித் தருகிறார்கள்.
இவற்றின் மூலம் எடுக்கப்பட்ட வீடியோ படங்களை மேலும் மெருகூட்டுவதற்கு

1. Computer HAMA Video Script 50
   (இது கொம்பியூட்டர் முறையில் எழுத்துக்களைப் புகுத்தும் கருவி)
2. **PANASONIC**
   DIGITAL Production Mixer **WJ MX 10**
   (இது பலவித காட்சிகளை ஒன்றுசேர்த்து மிகவும் தத்ரூபமாக அமைத்துக் கொடுக்கும் கருவி)
3. SANSUI Video P...

1. Computer **HAMA** Video Script 50

(இது கொம்பியூட்டர் முறையில் எழுத்துக்களைப் புகுத்தும் கருவி)

2. **PANASONIC**

**DIGITAL** Production Mixer **WJ MX 10**

(இது பலவித காட்சிகளை ஒன்றுசேர்த்து மிகவும் தத்ரூபமாக அமைத்துக் கொடுக்கும் கருவி)


3. **SANSUI** Video Processor VX - 99

(இது நிகழ்ச்சிகளை படமாக்கும்போது பலகோணத்து காட்சிகளை ஒன்றிணைத்து மெருகூட்டுகின்றது)

❋ சிறந்த படப்பிடிப்பு! ❋ நிறைந்த மதிநுட்பம்! ❋ அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர் சேவை!

இத்தனையும் ஒருங்கிணைந்த வீடியோ படப்பிடிப்புக்கள்

**இவற்றுடன்** உங்கள் **VIDEO** ஓடர்கள் அனைத்தும் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.




## வீடியோ படப்பிடிப்பாளர்களே!

உங்களால் பிடிக்கப்படும் **VIDEO** நிகழ்ச்சிகளை மிகக் குறைந்த செலவில் உங்கள் முன்னிலையில் உடனுக்குடன் எங்களால் **DIGITAL PRODUCTION MIXER WJ MX 10** மூலம் மிக்ஸிங் **(MIXING)** செய்து கொடுக்கப்படும்.

**உங்கள் வைபவங்களுக்குத் தேவையான**

❋ கதிரைகள் ❋ ரம்ளர்கள் ❋ சில்வர் ட்றே ❋ தகரப்பந்தல்
❋ மணப்பெண்களுக்குரிய சோடனைகள் ❋ மணவறை ❋ சரங்கள்

அனைத்தும் எம்மிடம் கிடைக்கும்.

விபரங்கட்கு:

தலைமை அலுவலகம்

# றீகல் வீடியோ மூவிஸ்

ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

கிளை: **ஸ்ரான்லி வீடியோ**

ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை, கச்சேரி, யாழ்ப்பாணம்.

B-962

## சிந்தனைக்கு

ஒரு சிலர் நன்மைக்காக, மிகப் பலர் கொள்ளும் வெறியே, கட்சி.

– ஜானத்தன்ஸ்விஃப்ட்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 22 - 05 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

த. பெ. எண். 05

# மலையகத் தலைமை!

“மலையகத் தமிழ் மக்கள் தங்கள் இடங்களைவிட்டு வேறு எங்கும் சென்று குடியேற வேண்டிய அவசியம் இல்லை. வவுனியாவுக்கோ மற்றும் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கோ அவர்கள் செல்லத் தேவையில்லை”

இப்படி இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் கூறியிருக்கிறார்.

மலையகத் தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர் என்று வர்ணிக்கப்படும் திரு. தொண்டமான் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தமது தோட்டப்பகுதி எல்லைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தால்தான் தமது தலைமையைப் பாதுகாத்துக்கொள்ள முடியுமென்று கருதுகிறார் போலும்!

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம்பெற்ற மறுவருடம் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறிப்பதற்கு டி. எஸ். சேனநாயகா தலைமையிலான யு.என்.பி. அரசு சட்டங்களைக் கொண்டு வந்தபோது அப்போது இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்ற பெயரில் அங்கம் வகித்த தொண்டமான், அஸிஸ், ராஜலிங்கம் போன்ற மலையகத் தமிழ்த் தலைவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர்.

இவர்களைப் பொலிசார் குண்டுக்கட்டாகத் தூக்கி பொலிஸ் வாகனங்களில் போட்டு வெகுதூரத்துக்கப்பால் கொண்டுபோய் இறக்கிவிட்டு நடந்துபோகச் செய்தனர்.

இத்துடன் அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. மலையகத் தமிழ் மக்கள் குடியுரிமை வாக்குரிமை இழந்தனர்.

பின்னர் காலத்துக்குக்காலம் மலையகத்தில் போராட்டங்களைத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பித்தாலும் அதற்கு முதலில் முன்னின்று அதரவு வழங்கும் தொண்டமானும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் பின்னர் ஏதோ காரணத்தைச் சொல்லி போராட்டத்தைக் கைவிடச் செய்து விடுவதும் வழக்கம்.

1961 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்க அலுவலகங்கள் முன் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி அரசாங்க இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்திருந்தபோது வடக்குக் கிழக்குப் பகுதித் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் அரசாங்கத்தை அடிபணியச் செய்யவும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை நடத்தப்போவதாக திரு. தொண்டமானும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அறிவித்தது

# “காட்டிக் கொடுத்தவர்களுடன் காப்பாற்றுபவர்கள் சேர முடியுமா?”

இப்போது பலருக்கு ஒரு மயக்கநிலை, எல்லாம்முடிந்துவிட்டது, அமைதி நிலவுகின்றது. இனிமேலும் எதற்காகப் புலிகள் ஆயுதம் ஏந்த வேண்டும்? என்றெல்லாம் பலர் சிந்திக்கின்றார்கள். உண்மையில் இது நிரந்தர அமைதிதானா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டு காலத்துக்குக் காலம் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களினால் எம்மவர்கள் ஏமாற்றப் பட்டதை - எட்டி உதைக்கப்பட்டதை - ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதையெல்லாம் நீங்கள் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

கடந்த காலங்களில் தொடர்ந்து வந்த துன்பங்கள் - துயரங்கள் - இன்னல்கள் இடுக்கண்கள் - இனக்கலவரங்கள் இவையெல்லாம் எமக்கு என்று ஒரு பாதுகாப்புப்படை அவசியம் என்பதை உணர்த்தி நின்றன. உங்களது பாதுகாப்புப்படையாக, தமிழீழ மக்களின் காவல் அரனாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விளங்கிய காரணத்தினாலேயே இன்று நீங்கள் ஓரளவுக்கு நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் நடமாட முடி

எமது மக்களைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் சின்னஞ்சிறுவர்கள் ஈடுபட வேண்டி இருக்கிறதேஎன்பதை எண்ணும்போது எமக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது. இதைப்பற்றி எண்ணி எமது தலைவரும் தினம் தினம் கவலைப்படத்தான் செய்கிறார்.

இது யாருடைய தவறு? அந்தச் சின்னஞ்சிறார்கள் ஏன் போராட முன்வருகின்றார்கள்? அவர்களை ஏன் நாம்



தேவர்

**கடந்த பதினெட்டாம் தேதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற தேனிசை செல்லப்பா குழுவினரின்இசை நிகழ்ச்சியின் போது விடுதலைப்புலிகள் இயக்கப்பிரமுகர் தேவர் ஆற்றிய உரை இங்கு முழுமையாகத்தரப்படுகிறது.**

**(ஆ - ர்)**

கின்றது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

விடுதலைப் புலிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது சின்னஞ்சிறார்கள் துப்பாக்கிகளோடு உலா வருகின்ற காட்சியினைப் பார்த்திருப்பீர்கள் பலர் அதனைக் கண்டு, ‘‘சின்னஞ்சிறுவர்களின் கல்வி பாழாகின்றதே’’ என்று பெருமூச்சு விடுவதும் எமக்குத் தெரியும். எந்த ஒருவரையும் அவர் சின்னஞ்சிறுவனாக இருந்தாலும் சரி பெண்ணம் பெரியவனாக இருந்தாலும் சரி நாங்கள் யாரையுமே பலவந்தமாகப் பிடித்துச் சென்று கட்டாய இராணுவ சேவை

போராட்டக்களத்தில் சேர்த்துக் கொண்டோம்?

சிந்தித்துப் பாருங்கள்!

அந்தச் சிறுவர்களைப் பெற்றவர்கள், அந்தச் சிறுவர்களின் அண்ணன்மார் போராட முன்வந்திருந்தால் அந்தச் சிறுவர்களுக்கு ஒரு சுதந்திரமான நாட்டைப் பெற்றுத் தந்திருந்தால் அவர்கள் ஏன் போராட முன்வர வேண்டும்?

நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்!

அந்தச் சின்னஞ் சிறார்கள் விடுதலைப்புலிகளாக மாறி கரங்களில் ஆயுதங்களை ஏந்தி ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்த காரணத்தினா

கூறினாரே கேவலம் 2000 பையன்கள்என்று, அந்தஇரண்டாயிரம் பையன்கள் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெரும்படையை–அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை அடித்து விரட்ட முடிந்ததென்றால் அந்த இரண்டாயிரம் இருபதினாயிரமமாக மாறினால் எமது வலிமை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மீண்டும் உங்களது மயக்க நிலைக்கு வருகிறேன்.

புலிகளுக்கும் அரசுக்கும் பேச்சுவார்த்தை நடக்கின்றது.

அரசுக்கும் புலிகளுக்கும் மாத்திரமா பேச்சுவார்த்தை நடக்கின்றது?

இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு இந்த நாட்டைக்காட்டிக் கொடுத்தவர்கள்-கூட்டிக் கொடுதவர்கள்அப்பாவி மக்களைக்கொன்றுகுவித்தவர்கள் அந்தஈனப்பிறவிகளுடன் சிங்களஅரசுபேச்சுவார்த்தைநடாத்துகின்றது.

சகல தமிழ்க்குழுக்களையும் ஒன்றுபடுத்த செயற் படுகின்றோம் என்கிறார் அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா.

காட்டிக் கொடுத்தவர்களோடு தமிழ்மக்களைக் காத்தவர்கள் ஒன்றுபட முடியுமா?

மானமே பெரிதென வாழ்பவர்கள் கூட்டிக்கொடுத்தவர்களோடு ஒன்றுபடுவதா?

இப்பொழுது சொல்லுங்கள் போராட்டம் முடிந்து விட்டதா என்று?

ஒரிசாவுக்கு ஓடிப் போனவர்களோடு பேச்சு வார்த்தை நடத்துகின்ற ஆட்சியாளர்களை நாம் நம்பலாமா? நீங்களே சொல்லுங்கள்.

போராட்டம் முடிந்து விட்டதா?

எந்த நோக்கத்திற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது போராளிகள் உயிர் நீத்தார்களோ, எந்த இலட்சியத்திற்காக பல்லாயிரக் கணக்கான தமிழ், முஸ்லிம் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களாலும், இந்திய ஆக்கிரமிப்பாளர்களினாலும், கூலிப் பட்டாளங்களினாலும் படுகொலை செய்யப் பட்டார்களோ அந்த இலட்சியம் நிறைவேறி விட்டதா?


நீங்களே சொல்லுங்கள்.

உடல், உயிர், உடைமைகள்அந்தனையையும் அர்ப்பணம் செய்கின்ற ஆயிரமாயிரம் வீர வேங்கைகளைத் தன்னகத்தே கொண்ட புனிதத் தலைமை அது. அந்தத் தலைமையை யாராலும் எப்பொழுதுமே ஏமாற்ற முடியாது. ஆனால் நிச்சயமாக அந்தந்த தலைமையை ஏமாற்ற நினைப்பவர்கள் ஏமாந்து போவார்கள் என்பதனைக் கூறி வைத்து, இங்கு கூடியிருக்கின்ற வடமராட்சி மக்கள் ஒப்பரேசன் லிபரேசனை மறந்திருக்க மாட்டீர்கள்.

மீண்டும் அப்படியானதொரு நிகழ்வு தமிழீழ மண்ணில் எங்குமே நிகழாதிருக்க விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துங்கள். வீட்டுக்கொரு பிள்ளையை நாடுகாக்கத் தாருங்கள்.

# குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி ?

(நேற்றைய தொடர்ச்சி)



கட்டிடமொன்றின் கண்ணாடி அமைப்புகள் விஷேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். ஏனெனில் கண்ணாடிகள் உடையும் போது பெருமளவில் சிதறக் கூடியவை. அத்துடன் ஆபத்தை ஏற்படுத்தும் கூரான பொருட்களும் கூட. இக் காரணங்களினால் கதவு, ஜன்னல்களில் பொருத்தப் பட்டிருக்கும் கண்ணாடிப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதாவது உடைவுறும் கண்ணாடியின் பகுதிகள் சிதறிப் பறக்காவண்ணம் காப்பிடுதல் வேண்டும். இதற்காக தடித்த துணிகளினால் கண்ணாடியின் மேல் ஒட்டி விடுதல் ஒரு முறையாகும். அத்துடன் வெளிச் சூழலுடன் தொடர்புள்ள ஜன்னல்களின் ஊடாக அவற்றின் கண்ணாடித் துண்டுகளுடன் பிற சிதறு பொருட்களும் உள் நுழையக் கூடியதால், ஜன்னல் சட்டங்களின் உட்பக்கத்தில் 1/2 அங்குல கம்பி வலைகள் மூடி, அடிக்கப்படுதல் வேண்டும்.

வெளி வாசல்கள் போன்றவைகூட சிதறு துண்டுகளையும், வெடிப்பதிர்வுகளையும் உள்விடக் கூடியன. ஆதலால் அவையும் மூடப்படுதல் வேண்டும். இதற்காக வாசலுக்கு வெளியே நிலமட்டத்தில் இருந்து குறைந்தது 6 அடி உயரத்திற்கு சுவர் போன்ற அமைப்பு கட்டப்படுதல் வேண்டும் இதற்காக செங்கல் ஆனது உபயோகிக்கப்படுமாயின் 13.1/2 அங்குல தடிப்புள்ளதாகவும் (1.1/2 செங்கல் தடிப்பு). கொங்கிறீற் உபயோகப்படுத்தப்பட்டால் 9 அங்குல தடிப்புள்ளதாகவும் அச்சுவர் அமைய வேண்டும். சுவர் கட்டுவதற்குரிய வசதி இல்லாவிடின் மணல் மூடைகளோ அல்லது இலகுவில் கிடைக்கக் கூடிய மரங்களோ சுவர் போன்று அடுக்கப்படுதலும் பாதுகாப்பானதாகும்.

தொடர்ச்சியான குண்டு வீச்சுக்கள் நடைபெறும் காலங்களில், பல மணித்தியாலங்கள் வரைகூட வெளியே நடமாடமுடியாத ஒரு நிலை ஏற்படும். அக்காலங்களில் உணவு, இருப்பிடம், நீர் வசதிகள் கூட ஒழுங்கற்று காணப்படும். இப்படியான சந்தர்ப்பங்

இத்துடன் அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. மலையகத் தமிழ் மக்கள் குடியுரிமை வாக்குரிமை இழந்தனர்.

பின்னர் காலத்துக்குக்காலம் மலையகத்தில் போராட்டங்களைத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பித்தாலும் அதற்கு முதலில் முன்னின்று அதரவு வழங்கும் தொண்டமானும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் பின்னர் ஏதோ காரணத்தைச் சொல்லி போராட்டத்தைக் கைவிடச் செய்து விடுவதும் வழக்கம்.

1961 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்க அலுவலகங்கள் முன் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி அரசாங்க இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்திருந்தபோது வடக்குக் கிழக்குப் பகுதித் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் அரசாங்கத்தை அடிபணியச் செய்யவும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை நடத்தப்போவதாக திரு. தொண்டமானும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அறிவித்தது. சில தோட்டங்களில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. வங்கி ஊழியர்களும் அச் சமயத்தில் வேலை நிறுத்தம் செய்து வந்தனர்.

மலையகத்தில் வேலை நிறுத்தம் செய்பவர்களினதும் அதற்குக் காரணமாக இருப்பவர்களினதும் சொத்துக்கள் பறிமுதலாகுமென்றும் அவர்கள் சிறைவைக்கப்படுவார்கள் என்றும் சிறிமா அரசு அறிவித்தது.

தொண்டமான்உடனடியாகவே வேலைநிறுத்தத்தைக் கைவிட்டார். உரிமைப் போராட்டத்தைவிட அவருக்கும் அவர் சகாக்களுக்கும் தங்கள் சொத்துக்களின் நலன்களே பெரிதாக இருந்தது.

1970 ஆம் ஆண்டளவில் உலகத் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தும் ஒரு மறைமுக முயற்சி மேற் கொள்ளப்பட்டது. தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி உதயசூரியன் கொடியாகத் தெரிவு செய்யப்பட்டது. இலங்கையில் உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் கொடியும் உதயசூரியன் கொடியெனத் தெரிவு செய்யப்பட்டது. மலையகத்தில் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கொடியும் உதயசூரியன் கொடி.

இப்பொழுது மலையகத்தில் உதயசூரியன் கொடி மறைந்து சேவலும் யானைக்குள் சங்கமமாகி விட்டது.

பண்ணாகத்தில் நடந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஆரம்பக் கூட்டத்தில் திரு.தொண்டமானும் முன்னணியின் தலைவர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பிருப்பதை அறிந்ததும் கூட்டணியிலிருந்தும் தலைமைப்பதவியிலிருந்தும் திரு. தொண்டமான் விலகிக் கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனாணை என்ற இடத்தில் மலையகத் தமிழர் சிலர் தாமாகச் சென்று குடியேறி காடுகளை அழித்துக் கழனிகளாக்கத் தொடங்கினர்.

இதைக்கவனித்த ஸ்ரீலங்கா அரசும் சிங்கள பௌத்த இயக்கங்களும் அங்கு குடியேறிய மலையகத் தமிழர்களை விரட்டியடித்து சிங்களவர்களைக் கொண்டுவந்து குடி யேற்றி அங்கு நிரந்தரமாக ஒரு பொலிஸ் நிலையத்தையுமே நிறுவிவிட்டது.

தேவநாயகத்தின் கல்குடாத் தொகுதியோடு இணைந்த புனானையில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை மீண்டும் அங்கு குடியமர்த்துவதற்கு அமைச்சர் தேவநாயகத்தினாலும் முடியவில்லை; அமைச்சர் தொண்டமானாலும் முடியவில்லை.

தொண்டமானின் போராட்டங்களே விசித்திரமானவை வீறுகொண்டெழும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் களையும் இளைஞர்களையும் எப்படியாவது சமாளித்துப் போராட்டத்தைப் பிரார்த்தனைகளாக்கி அரசுடன் பேச்சு நடத்தி மழுங்கச் செய்து விடுவார்.

மக்களின் நலனையும் உரிமையையும்விட சொந்த நலனே பெரிதென்பது தொண்டமான் கொள்கை; அவர் காங்கிரசின் கொள்கை. இதுவே மலையகத்தலைமை!

கின்றது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

விடுதலைப் புலிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது சின்னஞ்சிறார்கள் துப்பாக்கிகளோடு உலா வருகின்ற காட்சியினைப் பார்த்திருப்பீர்கள் பலர் அதனைக் கண்டு, ''சின்னஞ்சிறுவர்களின் கல்வி பாழாகின்றதே'' என்று பெருமூச்சு விடுவதும் எமக்குத் தெரியும். எந்த ஒருவரையும் அவர் சின்னஞ்சிறுவனாக இருந்தாலும் சரி பென்னம் பெரியவனாக இருந்தாலும் சரி நாங்கள் யாரையுமே பல வந்தமாகப் பிடித்துச் சென்று கட்டாய இராணுவ சேவையில் சேர்க்கவில்லை. இதைப் பற்றி எமது தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

இங்கு வந்த இந்திய இராணுவத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள் ஐம்பது வயதுக்கும் மேற்பட்டவர்கள், பெரும்பாலும் திருமணமானவர்கள், அவர்களுக்கும் குடும்பம் உண்டு பிள்ளை குட்டிகள் உண்டு ஏன் பேரப்பிள்ளைகள் கூட இருக்கலாம். தங்களுடைய நாட்டு அரசாங்கத்திற்காக அவர்கள் போராடி இறந்தார்கள். ஆனால் எமது மண்ணைப் பாதுகாப்பதற்காக-போராட்டக்களத்தில் சேர்த்துக் கொண்டோம்?

சிந்தித்துப் பாருங்கள்!

அந்தச் சிறுவர்களைப் பெற்றவர்கள், அந்தச் சிறுவர்களின் அண்ணன்மார் போராட முன்வந்திருந்தால் அந்தச் சிறுவர்களுக்கு ஒரு சுதந்திரமான நாட்டைப் பெற்றுத் தந்திருந்தால் அவர்கள் ஏன் போராட முன்வர வேண்டும்?

நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்!

அந்தச் சின்னஞ் சிறார்கள் விடுதலைப்புலிகளாக மாறி கரங்களில் ஆயுதங்களை ஏந்தி ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்த காரணத்தினாலேயே நீங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடமுடிகின்றது என்பதை மறந்து விடாதீர்கள். ஆகவே எமது தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவது போல் இது காலத்தின் கட்டாயம். நாங்கள் வேறு வழியின்றி தாமாகவே முன்வருகின்ற இந்தச் சிறுவர்களை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டியுள்ளது. எமது சமுதாயத்தில் உள்ள பெரியவர்கள் சிந்தித்தால் அவர்கள் போராட முன் வந்தால் இந்த நிலை மாறும் என்று கூறிவைக்க விரும்புகிறேன். அன்று ராஜீவ்காந்தி

களை நாம நம்பலாமா? நீங்களே சொல்லுங்கள்.

போராட்டம் முடிந்து விட்டதா?

எந்த நோக்கத்திற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது போராளிகள் உயிர் நீத்தார்களோ, எந்த இலட்சியத்திற்காக பல்லாயிரக் கணக்கான தமிழ், முஸ்லிம் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களாலும், இந்திய ஆக்கிரமிப்பாளர்களினாலும், கூலிப் பட்டாளங்களினாலும் படுகொலை செய்யப் பட்டார்களோ அந்த இலட்சியம் நிறைவேறி விட்டதா?

நீங்களே சொல்லுங்கள்.

இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சிங்கள ஆட்சியாளர் புரிந்து கொள்ள வேண்டும். உங்களது வஞ்சக வலைகளில் வீழ்வதற்கோ, கபட நாடகங்களில் மயங்குவதற்கோ விடுதலைப் புலிகள் ஒன்றும் ஏமாளிகள் இல்லை. கடந்த காலங்களில் உங்களோடு பேச்சு வார்த்தைகள் நடாத்திய- ஒப்பந்தங்கள் செய்து கொண்ட துரோகத் தலைமைகளை உங்களால் ஏமாற்ற முடிந்தது. ஆனால் இன்று எமக்குக் கிடைத்திருக்கின்ற தலைமை தியாகத் தலைமை. தங்களது

# சோவியத் - அமெரிக்க ஜனாதிபதிகளின் சந்திப்பு உறுதியாயிற்று

(மாஸ்கோ)

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் நெடுந்தூர அணு ஆயுதங்களைக் குறைப்பது தொடர்பாக முக்கியமான விடயங்களில் நேற்று முன் தினம் ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளன.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் யேம்ஸ் பேக்கர் நான்கு நாட்கள் சோவியத் தலைவர்களுடன் நடாத்திய பேச்சு வார்த்தைகளின் பின், தாம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதப் பரிஹரண ஒப்பந்தம், இரசாயண ஆயுத உடன்பாடு, இரண்டு அணு ஆயுதப் பரிசோதனை உடன்படிக்கைகளில் கணிசமான அளவு திருப்திகரமான முடிவுக்கு வந்துள்ளதால் பத்திரிகையாளர் மகா நாட்டில் தெரிவித்தார்.

தமதுபேச்சுவார்த்தைகளின் விளைவாக சில முக்கிய முடிவுகளுக்கு வந்துள்ளதாகத் தான் எண்ணுவதாகவும், பேச்சு வார்த்தைகளில் காணப்பட்ட முன்னேற்றம் வாஷிங்டனில் பயன் பொருத்தமான மகா நாட்டுக்கு அனுகூலமாக விருக்கும் என்று யேம்ஸ் பேக்கர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும், சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவும் சென்ற டிசம்பரில் மால்ட்டாவில் சந்தித்த சமயம் வாஷிங்டனில் எதிர் வரும் மே 30 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உச்சி மகாநாட்டிற்கு முன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்கள் பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும்என்று தீர்மானித்திருந்தார்.

யேம்ஸ் பேக்கரின் பத்திரிகையாளர் மகாநாட்டிற்குப் பிறகு பத்திரிகையாளர்களை சந்தித்த சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வேட் செவனேட்சே, சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவின் வாஷிங்டன் விஜயம் இப்பொழுது உறுதியாகி விட்டது என்றார்.

உச்சி மகாநாட்டில் முக்கியமான சில விடயங்களில் இணக்கங் காணப்பட்டு உடன்பாடு கைச்சாத்திடப் பட்டதும் ஒப்பந்தத்திலுள்ள முக்கிய விடயங்கள் பகிரங்கப் படுத்தப்படவுள்ளது - இவ்வாறு சோவியத் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அசல் உடன்படிக்கை வருட இறுதியில் கைச்சாத்திடப்படும் என்றார் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு மேலும் சில சலுகைகளைச் சோவியத்யூனியன் வழங்க வேண்டும் என்று அமெரிக்க நகரான ஹெஸ்ரனில் புஷ் பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

மாகாநாட்டின் பிறகு வாஷிங்டனுக்கு உடனடியாகப் பிரயாணத்தை மேற்கொண்டு மகாநாட்டு முடிவுகளை புஷ்சிடம் தெரிவிக்கவிருந்த யேம்ஸ் பேக்கர் களைப்புற்ற நிலையில் காணப்பட்டார். மிகக் கஷ்டமான சூழ்நிலையில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றதாக புஷ் கருத்துத் தெரிவித்தார்.

## வடக்குதெற்கு யேமன் ஓரிரு நாட்களில் இணைப்பு

(ஏடன்)

வடக்கு யேமன் இன்னும் ஓரிரு தினங்களில் தெற்கு யேமனுடன் இணைந்து விடும் என்று வடயேமன் ஜனாதிபதி அலி அப்துல் அசாலை கூறி இருக்கிறார்.

இந்த இணைப்பால் இந்தப் பகுதியில் அமைதியும் உறுதிப்பாடும் தோன்றும் என்று அவர் கூறினார்.

1988ல் யூலையில் வடயேமன் ஜனாதிபதிமூன்றாவது பதவிக் காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அலி அப்துல் லாகானே ஒன்றுபட்ட யேமனுக்கு தலைமை ஏற்பார்.

வெளி வாசல்கள் போன்றவைகூட சிதறு துண்டுகளையும், வெடிப்பதிர்வுகளையும் உள்விடக் கூடியன. ஆதலால் அவையும் மூடப்படுதல் வேண்டும். இதற்காக வாசலுக்கு வெளியே நிலமட்டத்தில் இருந்து குறைந்தது 6 அடி உயரத்திற்கு சுவர் போன்ற அமைப்பு கட்டப்படுதல் வேண்டும் இதற்காக செங்கல் ஆனது உபயோகிக்கப்படுமாயின் 13.1/2 அங்குல தடிப்புள்ளதாகவும் (1 1/2 செங்கல் தடிப்பு). கொங்கிறீற் உபயோகப்படுத்தப்பட்டால் 9 அங்குல தடிப்புள்ளதாகவும் அச்சுவர் அமைய வேண்டும். சுவர் கட்டுவதற்குரிய வசதி இல்லாவிடின் மணல் மூடைகளோ அல்லது இலகுவில் கிடைக்கக் கூடிய மரங்களோ சுவர் போன்று அடுக்கப்படுதலும் பாதுகாப்பானதாகும்.

தொடர்ச்சியான குண்டு வீச்சுக்கள் நடைபெறும் காலங்களில், பல மணித்தியாலங்கள் வரைகூட வெளியே நடமாடமுடியாத ஒரு நிலை ஏற்படும். அக்காலங்களில் உணவு, இருப்பிடம், நீர் வசதிகள் கூட ஒழுங்கற்று காணப்படும். இப்படியான சந்தர்ப்பங்களில் உங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் போன்றன ஓரிடத்தில் சேமிக்கப் பட்டிருப்பின், வீணான அலைச்சல்களையும், மனக்குழப்பத்தையும், பீதியையும் தவிர்த்துக் கொள்ள முடியும். எனவே இக் காரணங்களுக்காக உங்களது வீடுகளிலோ தொழிற்சாலைகளிலோ அன்றி கடைகளிலோகூட ஒரு அறையொன்று இதற்காக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வறையானது நிலத்தின் கீழ் அமைந்திருப்பின் அது மிகச் சிறந்த ஒரு பாதுகாப்பு வழியாகும். அவ்வகையான வசதிகள் இல்லாவிடின், யாதாயினும் ஒரு அறையொன்று ஆனால் அது வீட்டின் நடுப்பகுதியில் அமைந்திருக்கக் கூடியவாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பல மாடிக் கட்டடமொன்றாயின் அவ்வறையானது கீழ்த் தளத்தில் இருக்கவேண்டும். அதன் மேற்கூரையானது வலுவாக்கப்பட்ட கொங்கிறீற் (Rein-forced Concrete) இதனால் ஆனதாகவும், அதன் மேல் வேறு இயந்திர சாதனங்கள் போன்ற பாரமான பொருட்கள் எதுவும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வறையினுள் கண்ணாடி ஜன்னல்கள் யாதாயினும் இருப்பின் அவற்றிற்கு முன் கூறப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது அக்கண்ணாடிப் பகுதிகள் அகற்றப்பட வேண்டும். அத்துடன் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் எதுவும் இல்லாதவாறும், அவ்வறைக்கு அருகில் எங்கும் தீ ஏற்படுத்தும் மூலகங்கள் இல்லாதவாறும் பார்த்துக்கொள்ளல் வேண்டும். அறையினுள் சென்று வரக் காணப்படும் சாதாரண வழியைவிட ஒரு அவசரகால வழி இருப்பதும் அவசியமானதாகும். 10'x10'x8' அளவுகளைக் கொண்ட அறையானது 5நபர்களையும் 15'x10'x8' அளவுகளைக் கொண்ட அறையானது 7 நபர்களையும், 20'x15'x10' அளவுகளைக் கொண்ட அறையானது 13 நபர்களையும் தொடர்ச்சியாக 12 மணித்தியாலங்களுக்கு தங்க வைக்கக் கூடியது. மேற்குறிப்பிட்ட அளவுகள் மிகக் குறைந்த அவசியமானவையேயாகும். எனவே சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அதிகளவு ஆட்களோ அன்றி அதிக நேரத்திற்கோகூட இதனுள் தங்கவேண்டி வரும் எனவே அவ்வறையினுள் தங்க வேண்டி வரக்கூடிய நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதனுள் சேமிக்கப்படும் பொருட்களின் அளவும் திட்டமிடப்பட வேண்டும். பின் வரும் பொருட்கள் எந்நேரமும் அதனுள்ளே பாதுகாப்பாக, தயாராகயிருக்க வேண்டும்.

1. குடிநீர்.
2. உணவு (தகரங்களில் அடைக்கப்பட்டவை விரும்பத்தக்கது.)
3. முதலுதவிப்பெட்டி.
4. உயிர் காப்பு உபகரணங்கள் (அலவாங்கு, பிக்கான். மண்வெட்டி, கயிறு போன்றவை)
5. தீயணைப்பு கருவி, நீர்.
6. எண்ணெய் விளக்கு, மெழுகுதிரி, டோர்ச் தீப்பெட்டி.
7. பாட்டரியால் இயங்கும் ரேடியோ, புத்தகங்கள்.
8. மல, சல வசதி.
9. தளபாட, உடுப்பு வசதி.

(தொடரும்)

Registered as a News Paper at the G. P. O

ஈழநாதம்

## திருத்த வேலை

(முல்லைத்தீவு)

நாயாற்று பாலத்தில் சில திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன. இப்பாலத்துக்கு அருகில் நீர் அரிக்கும் பகுதியில் சீமேந்து போடப்படவுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் உயர் அதிகாரிகள் இங்கு பாலத்தை பார்வையிட்டனர்.

## துறைமுகங்கள் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

(கொழும்பு)

நாட்டில் உள்ள பிரதான துறைமுகங்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

துறைமுகங்கள், கப்பல் சேவை அமைச்சர் ரூபா கருணாதிலகா நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைக் கூறினார்.

கொழும்பு துறைமுகவேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன.

இதேபோல காலி, திருக்கோணமலை, காங்கேசன் துறை வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## நிர்வாகக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் சாரணியரின் இரண்டாவது நிர்வாகக் குழு கூட்டம் அரசாங்க அதிபர் திரு ஏ. சி. செபநாயசம் தலைமையில் நடைபெற்றது.

தற்காலிக தலைவராக திரு எஸ். வேதநாயகம் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்ற சாரணியர் செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

# வடமராட்சியிலிருந்து சுண்டிக்குளம் வரை

# புதிய பாதை அமைக்கப்படுகிறது

## மறுமலர்ச்சிக் கழகத்தின் வேலையை மகேந்திரராசா பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள கேவில் சந்தியிலிருந்து சுண்டிக்குளம் வரையிலான பகுதியை இணைக்கும் ஆறுமைல் நீளமுடைய மணல் பாதை வீதியாக உருவாக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் மேற்கொண்டுள்ள இந்தப் பணிக்கு வடமராட்சி கிழக்கு பகுதி மக்களும் அப்பகுதிகளில் வாடியமைத்து கடற்றொழில் செய்வோரும் ஒத்துழைப்பும் உதவியும் செய்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத்தயா) நேரில் சென்று இந்த வேலைகள் நடைபெறுவதை பார்வையிட்டு வேலைத்திட்டத்தை மேற்கொள்வோருடன் கலந்துரையாடினார்.

நீண்டகாலமாக இந்தப்பகுதிகளை இணைக்கும் வீதியின்றி இப்பகுதி மக்கள் அந்த ஆறு மைல் தூரத்தையும் நடந்தே செல்லவேண்டி இருந்தது.

மணல் பகுதியான இப்பாதையில் வாகனத்தில் செல்வதானால் உழவு இயந்திரங்கள் மூலமாகவேசெல்லவேண்டும்.

இதனால் இங்குள்ள மீனவர்கள் வாகனப் போக்குவரவு செய்ய முடியாததால் தாம் பிடிக்கும் மீன்களை உடனுக்குடன் சந்தைப்படுத்த முடியாது கருவாடாகக வேண்டிய நிலயும் ஏற்பட்டிருந்தது.

இந்தப்பாதை வீதியாக செப்பனிடப்பட்டால் குடாநாட்டுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் இடையே துரிதமாகச் செல்வதுடன் இப்பகுதி பொருளாதார நடவடிக்கைகளும் வளர்ச்சியடையும்.

## கவின் கலைக் கல்லூரிக்கு தேனிசைச் செல்லப்பா பரிசு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதி இசை நிகழ்ச்சியில் செல்லப்பா குழுவினர் விடுதலைப்புலிகளின்கவின் கலைக் கல்லூரிக்கு தாம் கொண்டு வந்த இசைக்கருவிகளை அன்பளிப்பாக வழங்கினர்.

இந்த அன்பளிப்புச் செய்யும்போது திரு தேனிசை செல்லப்பா அவர்கள் அண்மையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் ஸ்தாபிக்கப்பட்ட கவின்கலைக் கல்லூரிக்கு விஜயம் செய்ததாகவும் அங்கு புதிய கலைஞர்களை உருவாக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை பாராட்டுவதாகவும் இதனால் அக்கல்லூரிக்கென தமது தபேலாபுல்லாங்குழல்போன்ற பல இசைக் கருவிகளை அன்பளிப்புச் செய்கிறோம் என்று குறிப்பிட்டார்.

(லோ)

## 54 பொதுச் சுகாதார பரிசோதகர் நியமனம்

சுகாதாரஅமைச்சு ஐம்பத்திநான்கு சுகாதார பயிற்சியாளர்களை பொது சுகாதார பரிசோதகர்களாக நியமிக்கவுள்ளது.

இவ்வாறு இவர்கள் நியமனமாகும்போது வசதி குறைந்த பின்தங்கிய பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்

நாடு முழுவதும் தற்போது ஆயிரத்து முன்னூறு பொது சுகாதார பரிசோதகர்கள் கடமை புரிந்து வருகின்றனர்.

பல இடங்களில் சுகாதார பரிசோதகர்கள் இன்றி நோய் தடுப்பு போன்ற வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "வர்த்தக உலகம்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'வர்த்தகஉலகம்' என்றநூல் வெளியீட்டுவிழாநாளை23ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெபவுள்ளது,

யாழ். உதவிக்கல்வி பணிப்பாளர் திரு. சி. தியாகராஜா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப, பாலகிருஷ்ணன் தொடக்கவுரையும் வணிக முகாமை... யீட்டுரையாற்றுவார்.

முதல்பிரதியை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு ந, பேரின்பநாதன் பெற்றுக் கொள்வார்.


ஆசிரியை செல்வி கி. வீரசிங்கம், பட்டயக்கணக்காளர் செல்வி யோ. முருகேசு ஆகியோர் ஆய்வுரை நடாத்துவார்கள்.

சிறப்புப் பிரதிகளைபொறியியலாளர் திரு எஸ். உருத்...

## கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் விநியோகிக்கத்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நுகர்வோருக்குக் கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பண்டங்கள், மற்றும் அத்தியாவசிய ... களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றார்கள். மனிதநேய அடிப்படையில் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களை விற்பதற்கான நடவடிக்கைகளை ...




## எமது தாயகம் எங்கும் பரந்து வாழ தமிழ் மக்கள் முன்வரவேண்டும்

(தம்பலகாமம்)

''மக்கள் காலம் காலமாக பட்டினப் பகுதிகளிலே சகல சுகபோகங்களுடன் வாழ விரும்புகின்றார்கள். இந்த இழிவு நிலை காரணமாகவே எமது சொந்த நிலத்தை, நமது மூதாதையர் வாழ்ந்து மறைந்த புண்ணிய பூமியைப் பறிகொடுத்து வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்தநாட்டில் வாழும் ஏனைய இனங்களைப்போல எந்த இடத்திலும் பரந்துபட்டு வாழ தமிழ் மக்கள் முன்வரவேண்டும்'' என நேற்று முன்தினம் அன்று தம்பலகாமத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் சிற்றூரவையினரால் நடாத்தப்பெற்ற தொழிற் பேட்டை சம்பந்தமான ... தென சிற்றூர் அவையினர் முடிவு செய்துள்ளனர்.

மேலும் இச்சபையினர் இப்பகுதியில் கலாசாரசபை ஒன்றை நிறுவி மாதந்தோறும் வருகின்ற பௌர்ணமியன்று கலைவிழாக்களை நடாத்துவதெனவும் தீர்மானித்துள்ளனர்.

சமீப கால...

## தையல் பயிற்சி நிலையம்

விடுதலைப் புலிகள் மக்கள் (லோ)

# "வர்த்தக உலகம்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'வர்த்தக உலகம்' என்ற நூல் வெளியீட்டுவிழா நாளை 23ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். உதவிக்கல்வி பணிப்பாளர் திரு. சி. தியாகராஜா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப. பாலகிருஷ்ணன் தொடக்கவுரையும், வணிக முகாமையியல் கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். இராஜரட்னம் அறிமுகவுரையும் நிகழ்த்துவார்கள்.

வர்த்தக கல்வியதிகாரி திரு. எஸ். சிவராஜா வெளியீட்டுரையாற்றுவார்.

முதல்பிரதியை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு ந. பேரின்பநாதன் பெற்றுக்கொள்வார்.

ஆசிரியை செல்வி கி. வீரசிங்கம், பட்டயக்கணக்காளர் செல்வி யோ. முருகேசு ஆகியோர் ஆய்வுரை நடாத்துவார்கள்.

சிறப்புப் பிரதிகளை பொறியியலாளர் திரு எஸ். உருத்திரலிங்கம் வர்த்தக வங்கி முகாமையாளர் திரு. எஸ். இராகவன், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் திரு. பூ. ஸ்ரீதர்சிங், மின்தறி ஆலை முகாமையாளர் திரு. ஆர். சச்சிதானந்தம், செட்டியார் அச்சக உரிமையாளர் திரு இ சங்கர் ஆகியோர் பெற்றுக்கொள்வார்கள்.

## ஒய்வூதியங்களைத்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக கச்சேரி, கொழும்பு என்று அலைந்து திரிவதாக அமைச்சருக்கு புகார்கள் வந்துள்ளன.

இதேவேளை ஓய்வூதியம் பெற்றவர்களின் ஆவணங்கள் போன்ற விபரங்களை அவர்கள் பணிபுரிந்த திணைக்களங்கள் ஓய்வூதியப் பகுதிக்கு சரிவரக் கொடுக்காததே இந்த தாமதத்துக்கு காரணம் என ஓய்வூதியப்பகுதி உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பலஸ்தீனரின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலை வெளியேற்றி பலஸ்தீனியர்களுக்கான தனி ராஜ்யம் ஒன்றை அமைப்பிப்பது அரபு மற்றும் முஸ்லிம்மக்களின் குறிக்கோளாகும்,

இலங்கை அவர்களின் குறிக்கோளை அடைய எதனையும் செய்யத்தயாராக இருக்கிறது. நான் இந்தக் கொள்கையை பின்பற்றுவது அரபு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு அல்ல. இதுதான் சரியான கொள்கை என நான் சிந்திப்பதால்தான் அப்படி செய்கிறேன்.

இலங்கை எந்தவித சித்தாந்த அரசியல் வேறுபாடுகளுமின்றி சகல நாடுகளுடனும் சமாதான நட்புறவு நல்லெண்ணக் கொள்கையை பின்பற்றி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்துக்கு அமையவே இலங்கையில் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு மூடப்பட்டது. இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

## பொலிஸ் சூட்டு ஒருவர் பலி

(திருச்சி)

பாண்டிச் சேரிக்கு அருகே நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிர் இழந்தார்.

அங்குள்ள தொழிற்சாலை ஒன்றினில் தொழிற் சங்கத் தலைவரைக் கைது செய்த பொலிஸ்சார் மீது ஒரு கூட்டத்தினர் கல்லெறிந்தார்கள். இதில் நான்கு பொலிஸாருக்கு காயமேற்பட்டது. இது தொடர்பாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டார்கள்.

கும்பலை கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்ட போது ஒருவர் உயிரிழந்தார்.

## மீனில் புண்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லது இரண்டு வாரங்களுக்குள் அற்றுப் போய்விடும். தற்போது இப்பகுதியில் இது மாறி வருகிறது.

அதனால் மீனவர்கள் தமது தொழிலை ஆரம்பிப்பதுடன், பொதுமக்களும் இனி மீன்களை உண்ணலாம்.

இந்தநோய் குறித்து உல்லை முதல் வாழைச்சேனை வரை உள்ள நன்னீர், கடல் மீன்கள் ஆய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டது. நாரா ஸ்தாபனம் இந்தப் பரிசோதனையை நடாத்தியது இதன் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இவ்வாறு திரு. நாகையா கூறினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி. 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ளர்களை பொது சுகாதார பரிசோதகர்களாக நியமிக்கவுள்ளது.

இவ்வாறு இவர்கள் நியமனமாகும்போது வசதி குறைந்த பின்தங்கிய பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்

சுகாதார பரிசோதகர்கள் கடமை புரிந்து வருகின்றனர்.

பல இடங்களில் சுகாதார பரிசோதகர்கள் இன்றி நோய் தடுப்பு போன்ற வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் விநியோகிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நுகர்வோருக்குக் கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பண்டங்கள், மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் கிடைக்க வழி வகை செய்யும் பொருட்டு சமீபத்தில் வர்த்தக சங்கங்களின் ஒன்றிணைப்புக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஒன்றிணைப்புக்குழுவில் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் பலதரப்பட்ட வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றார்கள். மனிதநேய அடிப்படையில் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களை விற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், வர்த்தகர்களின் நல உரிமைகளைக் கவனிப்பதும் இக் குழுவின் பிரதான நோக்கங்களாகும் என்று இக் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவர் நேற்றுக் காலை ஈழநாதத்துக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒழுங்குப்படி வர்த்தகர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சில்லறை மொத்த விலைப் பட்டியலை பெரியகடைப் பகுதி பலசரக்கு வியாபாரிகள் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்றார். மற்றப் பண்டங்களை விற்பனைசெய்யும் வியாபாரிகள் காலக்கெடுவுக்கு முன்னதாக விலைப்பட்டியலைச் சமர்ப்பித்து விட்டார்களாம், ஆனால், பலசரக்கு வியாபாரிகளைப் பாறுத்த வரையில் காலக்கெடு முடிந்தும் விலைப் பட்டியல் விவகாரம் இழுபறி நிலையில் உள்ளதென்றார் அவர்.

## தமிழீழம் நேற்று

(1ஆம் பக்க தொடர்ச்சி)

யைச் சேர்ந்த சிலரும் சில வீதிகளில், சில சமயங்களில் கா ப்பட்டனர்.

மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் சுமார் ஒரு லட்சம் பேரைக் கட்டாயமாக நாடு கடத்தும் அரசின் சட்டத்தை எதிர்த்தும், மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுச் சித்திரவதை செய்யப்படுவதையும், காவலில் விசாரணையெதுவுமின்றி வைக்கப்படுவதையும, மலையக முன்னணித் தலைவர் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், மலையகத் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழீழமெங்கும் நேற்று ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது இந்த வேண்டுகோள் நேற்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. தமிழீழம் நேற்று முற்றாக ஸ்தம்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## மாத்தளைப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கோப்பறல் ஒருவர் பல களவுகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் பணம் ரூபா 4000, கைக்கடிகாரங்கள் ஆகியவற்றை இவர் திருடியுள்ளார். கைதுசெய்யப்பட்ட சமயம் திருட்டுப்போனதாகக் கருதப்படும் கைக்கடிகாரத்தை இவர் கையில்கட்டி இருந்தார்.

## சந்திரசேகரன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோயில்முன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வந்த இருபது பேர் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். இங்கு திரு. சந்திரசேகரன் நேரில் சென்று உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டு அதை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

அட்டன் முத்துமாரி அம்மன் கோயில்முன் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த சுமார் இருநூறு பேரும் பிரார்த்தனையை முடித்துக்கொண்டனர்.

நீதிமன்றத்துக்கு வெளியே பெருந்திரளான மக்கள் திரு. சந்திரசேகரனை வரவேற்கத் திரண்டிருந்தனர்.

## யாழ் நகரில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகேந்திரராசா, (மாத்தயா) செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்துப் பேசவிருக்கும் ஜனாப்ஹமீதிடம் வடக்கு கிழக்குமாகாணங்களில் படைகுவிப்பு, ஈ. பி. ஆர்.எல்.எவ். வுடன் அரசுநடாத்தும் பேச்சு முதலிய விஷயங்கள் பற்றி மக்கள் முன்னணியினர் ஆட்சேபம் தெரிவிக்கவிருப்பதாகத் தெரிகிறது.

# எமது தாயகம் எங்கும் பரந்து வாழ தமிழ் மக்கள் முன்வரவேண்டும்

(தம்பலகாமம்)

"மக்கள் காலம் காலமாக பட்டினப் பகுதிகளிலே சகல சுகபோகங்களுடன் வாழ விரும்புகின்றார்கள். இந்த இழிவு நிலை காரணமாகவே எமது சொந்த நிலத்தை, நமது மூதாதையர் வாழ்ந்து மறைந்த புண்ணிய பூமியைப் பறிகொடுத்து வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்தநாட்டில் வாழும் ஏனைய இனங்களைப்போல எந்த இடத்திலும் பரந்துபட்டு வாழ தமிழ் மக்கள் முன்வரவேண்டும்" என நேற்று முன்தினம் அன்று தம்பலகாமத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் சிற்றூரவையினரால் நடாத்தப்பெற்ற தொழிற் பேட்டை சம்பந்தமான கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய திரு. ஆர், சண்முகலிங்கம் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் தம்பலகாமம் அரசியற் பொறுப்பாளர் திரு. மூர்த்தி அவர்களும் கலந்துகொண்டார்.

சிற்றூரவையினர் இக்கூட்டத்தில் மூலப் பொருட்களை மையமாக வைத்து தம்பலகாமம் கிராமத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்பட வேண்டிய தனவசியத்தை ஆராய்ந்தனர். சவர்க்காரம், காட்போட், தும்புத்தொழிற்சாலை, செங்கல் உற்பத்தி போன்றவற்றில் ஏதாவது ஒன்றை விரைவில் அமைப்பதென சிற்றூர் அவையினர் முடிவு செய்துள்ளனர்.

மேலும் இச்சபையினர் இப்பகுதியில் கலாசாரசபை ஒன்றை நிறுவி மாதந்தோறும் வருகின்ற பௌர்ணமியன்று கலைவிழாக்களை நடாத்துவதெனவும் தீர்மானித்துள்ளனர்.

## சமீப கால...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

கூரை மின்விசிறிகளின் மொத்தப் பெறுமானம் ரூபா 2 லட்சத்து 80ஆயிரமாகும். ஆனால் சுங்கப் பகுதியினர் பெறுமதியை ரூபா 6லட்சத்து 40ஆயிரம் என மதிப்பிட்டுள்ளனர்.

இது பற்றி திசாநாயக்கா கருத்துத்தெரிவிக்கையில் விலையைக் குறைத்துத் தெரிவிக்கும் பலரை நாம் பிடித்துள்ளோம். பெருந்தொகையான பணத்தை தீர்வையாக வழங்குவதைத் தடுப்பதற்காகவே இப்படிச் செய்கிறார்கள். பிடிபடாமல் தப்புவதற்காகவே இந்த மின்விசிறி இறக்குமதியாளர் மின்விசிறியைப் பாகங்களாக கழற்றிப் பொதி செய்துள்ளார். சமீபகால சுங்க வரலாற்றில் இது மிகப்பெரிய மோசடியாகும் என்றார்.

## தையல் பயிற்சி நிலையம்

(தம்பலகாமம்)

சகல வசதிகளுடன் கூடிய தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கும் வேலைகளில் தம்பலகாமம் சிற்றூர் அவையினர், இரவு பகலாக துரித முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இத் தையல் பயிற்சி நிலையத்திற்கான கட்டிட வேலைகள் தம்பலகாமம் கூட்டாம் புளியடியில் முடிவுறும் நிலையில் உள்ளன. கூடிய விரைவில் இந்தத் தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படும் என சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஸ்ரீ லங்கா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது முதல் தரமான மதுபானங்களையே பரிமாறி வந்தன. ஸ்ரீலங்கா தூதராலயங்களுக்கு விநியோகிக்கப்பட்ட மதுபானவகைகள் தீர்வையில்லாமல் குறைந்த சலுகை விலையிலேயே வழங்கப்பட்டு வந்தன. இனிமேல் இந்தச் சலுகையும் வழங்கப் பட மாட்டாது.

ஏலவே அரசாங்கம் அல்லது அரசாங்க நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்படும் வைபவங்களில் மதுபானம் பரிமாறுதல் நிறுத்தப்பட்டிருந்தது. இதே வேளை, அமைச்சர்கள் திணைக்கள அதிகாரிகள் அதிதிகளாக கலந்து கொள்ளும் வைபவங்களிலும் மதுபானம் வழங்கப்படுவது அரசாங்கத்தின் முடிவுப்படி தடை செய்யப் பட்டிருந்தது.

# காஷ்மீரில் முஸ்லிம் மதகுரு தீவிரவாதிகளால்சுட்டுக்கொலை

காஷ்மீர் அவாமிக் செயற் கமிட்டியின் தலைவரும், முஸ்லிம் மதகுருவுமான மௌலவி மொஹமட் சொரூக் நேற்றுக் காலை தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாற்பத்தைந்து வயதான அவரை ஸ்ரீநகரில் உள்ள அவரது இல்லத்திற்குவந்த அடையாளம் தெரியாத மூன்றுபேர் பதினைந்து முறை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார்கள். அவர் குண்டடிபட்டதும் உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டுபோகப்பட்டு, மருத்துவமனையிலே காலமானார். மருத்துவ மனையைச் சுற்றிப் பலத்த காவல் போடப்பட்டது. ஆனால் சுமார் பத்தாயிரம்பேர் கூட்டமாக வந்து பாதுகாப்புப் படையினரது கட்டுக் காவலை மீறி உள்ளே நுழைந்து, இறந்த மதகுருவின் உடலை பலவந்தமாக எடுத்துச் சென்றார்கள்.

இந்தச் சம்பவத்தைஅடுத்து அந்தப் பகுதி முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வெசுவில் மொஹாதீன் என்ற தீவிரவாத அமைப்பு அவரை கொலைசெய்யப் போவதாக ஏற்கனவேமிரட்டி இருந்தது என்று அவாமி செயற்கமிட்டித் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## ஆந்திராவில் புயலால் இறந்தவர்கள் தொகை 815

(டில்லி)

தென் இந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் 11 நாட்களுக்கு முன் வீசிய புயலால் கடந்த ஞாயிறு வரை 815பேர் காலமாகியுள்ளனர்.

அதிகமான இறப்புகள் குண்டூரில் நிகழ்ந்துள்ளன.

## நெடுந்------

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கற்பார் ஒன்றுடன் மோதிச் சேதமடைந்தது.

அதிலிருந்த இந்திய மீனவர்கள் பாதுகாப்பாக நெடுந்தீவுக்கரை சேர்ந்தனர். சேதமடைந்த படகை மீட்கவும், கரை சேர்ந்த மீனவர்களின் தேவைகளுக்கு உதவவும் விடுதலைப் புலிகள் அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுள்ளனர்.

சேதமடைந்த படகிலிருந்தோரைத் தேடிவந்த மேலும் இரு படகுகளில் வந்தோர் கடலில் மூழ்கியுள்ள படகினை மீட்டுச் செல்லும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். (62)